[11th March 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் முக்கூட்டுக்கூட்டத்தில் இந்தமாதிரி யோசனை வந்தது. மூன்று குழந்தைகளுக்கு மேல் நான்காவது பிரசவத்திற்கு மெடர்னிடி லீவ் கொடுக்கக்கூடாது என்ற யோசனை வந்தது. பலர் அதை ஆட்சேபித்தார்கள். நானும் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன். நான்காவது குழந்தை பிறப்பதற்கு அவர்கள் காரணம் அல்ல. அதற்காக அவர்கள் தண்டிக்கப்படக் கூடாது. மெடர்னிடி லீவு எப்படியும் இருக்கவேண்டும். மெடர்னிடி லீவ் இல்லாமல் வேலை செய் என்று சொல்வது தவறு என்ற கருத்தைச் சொன்னேன். அதுதான் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

திரு. சா. கணேசன் : பிரசவ கால விடுமுறை என்பதிலே மூன்று குழந்தைகளுக்கு மேல் ஏற்படுகிற பிரசவமா அல்லது மூன்று பிரசவத்திற்கு மேல் ஏற்படுகிற பிரசவமா? ஒரே பிரசவத்தில் கூட இரண்டு குழந்தைகளைப் பெற்று விடக்கூடும். ஆகவே, குழந்தை அடிப்படையிலா அல்லது பிரசவ அடிப்படையிலா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை, கவலைப்பட வேண்டிய அவசியமும் இல்லை. நான் என்னுடைய கருத்தையும், மத்திய அரசாங்கக் கருத்தையும் சொன்னேன். மெடர்னிடி லீவ் கொடுப்பதைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. மெடர்னிடி லீவ் கொடுக்கிற வரையில், மூன்று குழந்தைகளா அல்லது மூன்று பிரசவமா என்ற கேள்வி எழுவதற்கே இடமில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : கேள்விக் குறிப்பில் ' ஆசிரியர்களுக்குப் பிரசவ விடுமுறை' என்று இருக்கிறது. இந்தப் பிரசவ விடுமுறை ஆசிரியைகளுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் தெரிந்து கொள்ளவேண்டும். சட்டபூர்வமாக 'ஆசிரியர்' என்றால் " ஆசிரியை " யும் சேர்த்துக் கொள்ளப்படும். கான்டெக்ஸ்ட்டைப் பார்த்துப் பொருள் கொள்ளவேண்டும். இது ஆசிரியைகளைத்தான் குறிக்கும்.

கனம் சபாநாயகர் : ஆசிரியர்களும் அப்ளிகேஷன் போட்டால் கொடுப்பார்கள். பிரசவ வேதனை வந்திருக்கிறது என்று ஆசிரியர்கள் அப்ளிகேஷன் போடலாமே. (சிரிப்பு).

* 253 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி :
திரு. சா. ராமசாமி :** } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்களின் ஓய்வுகால வயதை மாற்றியமைக்க வேண்டுமென்று கோரி ஆசிரியர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அண்மையில் ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

11th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) அரசாங்கத்தின் கீழும், மானிய உதவிபெறும் நிர்வாகத்தின் கீழும், ஊராட்சி மன்றங்களின் கீழும் உள்ள பலவகைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக அரசாங்கம் 1963 மே மாதத்தில் உயர்த்தியது. ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 60-ஆக உயர்த்துமாறு முறையீடுகள் அரசாங்கத்திடம் அவ்வப்போது வந்தவண்ணமிருக்கின்றன. ஆனால் இந்த வேண்டுகோளுக்கு இணங்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : நமது நிர்வாகத்திலுள்ள ஆசிரியர்கள் 58 வயதுக்கு மேல் ஓய்வு பெற்ற பிறகு தனியார் பள்ளிக்கூடத்திலே அவர்களைப் போட்டு சம்பளம் கொடுக்கிறார்கள். அந்தத் தனியார் பள்ளிகளுக்கு அரசாங்கம் உதவித்தொகை அளிக்கிறது. அப்படி இருக்கும்போது அரசாங்கப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களுடைய ஓய்வுகால வயதை 60 என்று ஏன் உயர்த்தக் கூடாது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓய்வு பெறும் வயதை உயர்த்துவதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது பற்றுக்குறை எந்த அளவு இருக்கிறது என்பதுதான். அதைக் கவனிக்காமல் உயர்த்திவிட்டால் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். ஐம்பத்தைந்து வயது என்று இருக்கும்போது பற்றுக்குறை இருக்கிறது என்ற காரணத்தால் 58 வயது என்று உயர்த்தப்பட்டது. தனிப்பட்டவர்களுடைய பள்ளிகளில் 60 வயது வரை வைத்துக் கொள்ள அவர்கள் அரசாங்க அனுமதி பெற்றுத்தான் வைத்துக் கொள்ளவேண்டும். அம்மாதிரி நிலை இருந்தால் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலும் அது கவனிக்கப்படும். அதை அப்போதைக்கப்போது அரசாங்கம் கவனித்து அனுமதி அளிக்கும். பொதுவாக, 58-ல் இருந்து 60-ஆக ஓய்வு பெறும் வயதை உயர்த்தினால் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். அதுதான் முக்கியமான காரணம். ஆகவே, 58 வயதுக்கு மேல் உயர்த்துவதாக இல்லை.

திரு. சா. கணேசன் : ஆசிரியர்கள் வயதை 58 என்று உச்சவரம்பு வைத்து விடுவதால் இன்று இருக்கிற ஆசிரியர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதோடு, சிறந்த, அனுபவமுள்ள ஆசிரியர்களையும் இழக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கல்லூரிகளில் 60 வயதுக்கு மேல் 65, 67 வயது வரை பிரின்சிபால்கள், ப்ரொபசர்கள், சிறந்த தகுதி பெற்றவர்களை நீடித்துக் கொண்டு போக வழிவகைகள் இருக்கின்றன. இந்த மாதிரி அடிப்படையில் திறமையும், அனுபவமும் உள்ளவர்களை 60 வயது வரையில் வைத்துக் கொள்ள வேண்டும்; வைத்துக்கொள்ள முன்வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்க கல்லூரிகளில் 58 வயது கூட இல்லை; 55 வயதுதான் ஓய்வு கால வயது. அவர்கள் வயதை உயர்த்தவில்லை. காரணம், பற்றுக்குறையை ஒட்டி இதெல்லாம் மாற்றப்படுகிறது. நான் முன்பே கூறியபடி, 58 வயதிலிருந்து

60 வயது என்று ஓய்வு பெறும் வயதை உயர்த்தினல் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடும். ஆகையால் அவ்வாறு செய்வதாக உத்தேசமில்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தனியார்துறைப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள் 58 வயதிற்கு மேல் பணிபுரிய வேண்டுமானல் அரசாங்க அனுமதியைப் பெறவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அரசாங்கப் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் அந்தமாதிரி அனுமதி வழங்கப்படுவது உண்டா? எந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வாறு வழங்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: குறிப்பிட்ட கேஸ்களில் தகுந்த காரணம் இருந்தால் அரசாங்கம் கவனிக்கும். சாதாரணமாக அம்மாதிரிச் செய்வதில்லை.

புலவர் கா. கோவிந்தன்: உத்தியோகம் கொடுக்கிற நேரத்தில் ஹரிஜனங்களுக்கு வயதுக் கட்டுப்பாட்டில் கூடக் கொடுக்கிறர்கள். அதேபோன்று ஓய்வு பெருகின்ற நேரத்தில் ஹரிஜனங்களைப் பொருத்தவரை 2, 3 ஆண்டுகளுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களும் ஆசிரியர் பணிக்குத் தகுதி பெற்றுக் கொண்டு வருகிறர்கள். ஆகவே, ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போகும் என்ற காரணத்தால் ஹரிஜனங்களாக இருந்தாலும் வயதை அதிகப்படுத்த உத்தேசமில்லை.

திரு. சா. ராமசாமி: 58 வயதுக்கு மேல் ஒருவரை நியமிக்கும் போது உடல் நலத்திற்கேற்றவாறு மருத்துவச் சான்றுகள் பெற்று நியமிக்கலாம். அதேபோன்று 58 வயதுக்குள் ஓய்வு பெற விரும்புகிறவர்களுக்கும் தனிச் சலுகை அளிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 55 வயதுக்குள் ஓய்வு பெறுகிறவர்களுக்கு எவ்வாறு விதிகள் இருக்கின்றனவோ அதே விதிகள் 58 வயதுக்குட்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

* 254 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆதாரப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது ஆதாரப் பயிற்சி பெருத ஆசிரியர்களை நியமனம் செய்யக்கூடாது என்று அரசினரால் அறிவிக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes.

* 255 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹையர் கிரேடு ஆசிரியர்களாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இல்லை.